அத்தியாயம் 4
இலங்கையின் பௌதிக பண்புகள்

ஆட்புல கடற் பிரதேசம்

கடற்சட்டத்தின் மூன்றாவது சரத்தின் அடிப்படையில், உலகின் சகல கரையோர நாடுகளும் கரையோர எல்லையிலிருந்து கடல் மைல் 12க்கு உட்பட்ட கடல் எல்லையை அனுபவிக்கலாம். அந்தப்பிரதேச எல்லைகளே ஆட்புல கடற் பிரதேசம் என அழைக்கப்படும் (படம் 4.1). இலங்கை நாட்டின் இந்த ஆட்புல எல்லையானது சட்டத்தினடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆட்புல கடல் பிரதேசத்திற்குட்பட்ட நில, வான், கடல் என்பனவும் அவற்றினுள்ளே அடங்கியுள்ள அத்தனையும் அந்நாட்டுக்குரியதாகும். இந்த ஆட்புல கடற்பிரதேசத்தில் தீவுகள், மணற்றடைகள், கற்பாறைகள் ஆகிய தரைத்தோற்ற அம்சங்களும் உள்ளடங்கும்

ஒரு நாட்டுக்கு உரிமையான கடல் எல்லையைத் தீர்மானிக்கும் சர்வதேச கடற்சட்டம் 1994 நவம்பர் 16ஆந் திகதியிலிருந்து உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ளது. இலங்கை அந்த ஒப்பந்தத்தில் 1982 டிசம்பர் 10ஆந் திகதி கைச்சாத்திட்டது. இச்சட்டத்தின் பிரகாரம் இலங்கைக்கு 200 கடல் மைல் வரையிலான தனித்துவமான பொருளாதார வலயம் உரித்துடையதாகும். இந்த வலயத்தில் உள்ள நீர்ப்பரப்பிலும் சமுத்திர அடித்தளத்திலும் காணப்படும் சகல வளங்களும் இலங்கைக்குரியதாகும். இலங்கைக்கு சொந்தமான கடல் எல்லையானது உயிருள்ள உயிரற்ற வளங்களினால் நிறைந்துள்ளது. மணல், கல், கல்சியம், காபனேற்று, பொற்றாசியம் முதலானவை கண்ட மேடைகளிலும், கண்டச் சரிவுகளிலும் கண்டுப்பிடிக்கப் பட்டள்ளது.



தேசப்படம் 4.1
இலங்கைக்கு உரித்தான கடல் எல்லை
மூலம்:- நிலஅளவைத்திணைக்களத்தின் இலங்கை தேசிய தேசப்படத் தொகுப்பு பாடசாலைக்கானது.

செயற்பாடு 1

- இலங்கையின் ஆட்புல கடற்பிரதேச படமொன்றை வரைந்து அந்தப் பிரதேசம் இலங்கையின் பொருளாதாரத்தில் வகிக்கும் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் விளக்குக.

தரைத்தோற்றம்

கடல் மட்டத்திலிருந்து தரையின் உயரத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் தரைத்தோற்றம் ஐந்து வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. 4.2 தேசப்படத்தைப் பார்க்கவும். ஒவ்வொரு வலயத்திலும் முனைப்பாகக் காணப்படும் பொதுப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன.

1. கரையோரச் சமவெளி-கடல் மட்டத்திலிருந்து 30m வரை
2. உள்ளகச் சமவெளி - 30m-300m மீற்றர் வரை
3. மத்திய மலைநாடு - 300m மீற்றருக்கு மேல்
4. சப்ரகமுவ பாறைத்தொடர்
5. கல்லோயாக் குன்றுத் தொகுதி

மத்திய மலைநாட்டுக்கு தென்மேற்கே, சப்ரகமுவா மலைத்தொடரும், கிழக்கே கல்லோயாக் குன்றுகளும் காணப்படுகின்றன. இவை 300 மீற்றருக்கு மேற்பட்ட உயர் நிலங்கள் ஆகும்.



தேசப்படம் 4.2 இலங்கையின் தரைதோற்ற வலயங்கள்

கரையோரச் சமவெளி

இலங்கையில் கடல் மட்டத்திலிருந்து 30 மீற்றர் சமவுயரக்கோட்டு எல்லை வரை காணப்படும் பிரதேசம் கரையோரச் சமவெளிக்குள் அடங்கும். இந்த வலயம் வடபகுதியில் அகன்றும் தென் பகுதியில் ஒடுங்கியும் காணப்படுகின்றது. கரையோர சமவெளியில் தீவு, குடா, களப்பு, முனை, கழிமுகம் சேற்று நிலம் ஆகிய விசேட அம்சங்கள் பல உண்டு.

- **தீவு** - நான்கு பக்கங்களாலும் நீரினால் சூழப்பட்ட நிலப்பரப்பு தீவாகும்.
  உ- ம்: மன்னார் தீவு
- **குடா** - மூன்று பக்கங்களும் நிலத்தால் சூழப்பட்டு கடற்பக்கத்தில் வாய் அகன்றதாய் உவர் நீரினைக் கொண்ட கடற்பிரதேசம் குடா எனப்படும்.
  உ - ம்: அறுகம் குடா, கொட்டியாரக் குடா
- **களப்பு** - மூன்று பக்கங்களும் நிலத்தால் சூழப்பட்டு கடற்பக்கத்தில் வாய் ஒடுங்கியதாய், குறிப்பிட்ட ஒரு காலத்தில் மாத்திரம் கடலுடன் தொடர்புற்றதாய், உவர்நீரினைக் கொண்ட ஆழமற்ற கடற்பிரதேசம் களப்பு எனப்படும்.
  உ - ம் : புத்தளம், மட்டக்களப்பு
- **முனை** - கடலை நோக்கி முனைப்பாக நீண்டிருக்கும் நிலப்பகுதி முனை எனப்படுகிறது.
  உ - ம் : தெய்வேந்திர முனை, பனை முனை
- **கழிமுகம்** - சில நதிகள் கடலோடு கலக்கும் இடத்தில், அது பல கிளைகளாகப் பிரிந்து கலக்கும். நதிகள் கொண்டு வரும் பொருட்கள் அதன் ஆற்று முகத்தில் முக்கோண வடிவில் (அல்லது விசிறி வடிவில்) படியவிடப்படுவதால் உருவாகும் நிலப்பரப்பு கழிமுகம் எனப்படும். இதனை டெல்ற்றா எனவும் அழைப்பர்.
  உ-ம் மகாவலி கங்கைக் கழிமுகம்
- **சேற்று நிலம்** - தாழ்நிலங்களில் ஆறுகள் வாரிக்கொண்டு வரும் பொருள்கள் படியவிடப்படுவதனால் நீர் பாய்ந்து செல்ல முடியாமல் அங்கே தேங்கி விடுவதாலும், ஆற்று நீரானது ஆற்று அயற்புறங்களுக்குப் பரவிப் பாய்ந்து அங்கே தேங்கி விடுவதனாலும் சேற்று நிலங்கள் உருவாகின்றன. உ-ம்
  உ-ம் முத்துராஜ வெல, சோமாவதி
- **நுழை குடா** - ஆழமான நுழைகுடாக்களும் இக்கடற்கரையோரத்தில் உள்ளன. இவை கப்பல் துறைகள் அல்லது துறைமுகங்கள் அமைவதற்கு ஏற்றது.
  உ - ம் : காலி ஓங்கல், திருகோணமலை

செயற்பாடு 2

❒ இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களைப் பிரதிபலிக்கும் முப்பரிமாணமாதிரிப் படமொன்றை அமைக்க. இதற்குப் பாட ஆசிரியர் /ஆசிரியையின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவும்.

உள்ளகச் சமவெளி

30 மீற்றர் சமஉயரக் கோட்டுக்கும் 300 மீற்றர் சம உயரக்கோட்டுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி இவ்வலயத்தில் அடங்கும். 4.3 தேசப்படத்தைப் பார்க்கவும். இச் சமவெளியின் வடக்கு, வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகள் அகன்றவையாகும். தெற்கு, தென்கிழக்குப் பகுதிகள் ஒடுங்கியவையாகும். நீண்ட காலம் அரிப்புக்குள்ளாகியதால் இடத்திற்கு இடம் எச்சக்குன்றுகள் (மொனாட் நொக்ஸ்) காணப்படுகின்றன. மிகிந்தலை, ரிதிகல, கதிர்காமம் என்பன உதாரணங்களாகும்.



தேசப்படம் 4.3 உள்ளகச்சமவெளி

மத்திய மலைநாடு

4.4 தேசப்படத்தில் மத்திய மலைநாடு காணப்படுகின்றது. முன்பு கற்ற இருவலயங்களின் தரைத்தோற்றம் போலன்றி, மத்திய மலைநாட்டின் தரைத்தோற்றம் சிக்கலானது. அப்பிரதேசம் முழுவதும் 300 மீற்றருக்கு மேற்பட்ட உயரமுடையது. தலைகீழான ஆங்கில T எழுத்து போன்று அல்லது நங்கூர வடிவத்தில் மலைத்தொடர்கள் அமைந்திருப்பதனைக் காணலாம். இந்த நங்கூர அமைப்பின் அடிப்பாகத்தின் மேற்கு பகுதில் சிவனொளிபாத மலைத் தொடர் உள்ளது. இந்த மலைத்தொடரின் அதி உயர்ந்த சிகரம் சமனலை அல்லது சமந்த கூடம் (2237 மீற்றர்) ஆகும். கிழக்குப் பகுதில் அப்புத்தளை- நமுனுகுல மலைத்தொடர் (2036 மீற்றர்) அமைந்துள்ளது. கிரிகால பொத்தைக்கும் (2395 மீற்றர்) பீதுறு தாலகாலைக்கும் (2524 மீற்றர்) இடைப்பட்ட பிரதேசத்தை நங்கூரத்தின் நடுத்தண்டாகக் கருதலாம். நக்கிள்ஸ் மலை நங்கூரத்தின் தலைப்பகுதியாகும். மத்திய மலை நாட்டின் இன்னொரு சிறப்பம்சம் மேட்டு நிலங்களாகும். ஹட்டன், வெலிமட, கண்டி, கொஸ்லாந்தை என்பன முக்கியமான மேட்டு நிலங்களாகும். கலகெதர, பலன, கினிகத்தேன, மத்திய மலைநாட்டிற்குள் நுழையக்கூடிய பிரதான கணவாய்களாகும். இவை வீதிகள் அமைப்பதற்கு முக்கியமானவையாகும். ஹோட்டன் சமவெளி, அம்பேவலெச் சமவெளி, சீதாஎலியசமவெளி, மூன்சமவெளி, மத்திய மலை நாட்டில் அமைந்துள்ள பிரதான சமவெளிப்பிரதேசங்களாகும். புல்வெளிகள் காணப்படுவதால் கால்நடைவளர்ப்புக்கு இவை சாதகமானவை. துன்கிந்தை, தியலுமு, லக்ஷபான அபர்டீன் ஆகிய நீர்வீழ்ச்சிகள் மலைநாட்டின் தரைத்தோற்றத்திற்கு அழகூட்டுவனவாயும் அமைந்துள்ளன. இயற்கை அழகுடன் நீர்வீழ்ச்சிகள் நீர்மின்னை உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.



தேசப்படம் 4.4 மத்திய மலை நாடு

உரு 4.1
நீர்வீழ்ச்சி

சப்ரகமுவ பாறைத்தொடர்

இந்த வலயம் மத்திய மலைத்தொடருக்கும் உள்ளகச் சமவெளிக்கும் இடையில் மத்திய மலைநாட்டுக்குத் தென்மேற்கே அமைந்துள்ளது. இவ்வலயத்தின் சிறப்பியல்பு யாதெனில் வடமேற்கிலிருந்து தென்கிழக்குத் திசையாக நீண்டு செல்லும் சமாந்தரமான பாறைத்தொடர்களின் அமைப்பாகும். இங்குள்ள புளுத்தோட்டை, இறக்குவானை மலைத்தொடர்களுக்கிடையே இவற்றுக்குச் சமாந்தரமாக ஒடுங்கிய பள்ளத்தாக்குகள் அமைந்துள்ளன. ஹினிதும (661 மீற்றர்) குக்குளுகலைச் சிகரம் (704 மீற்றர்) கொங்கலைச் சிகரம் (1358 மீற்றர்) என்பன இங்குள்ள ஒரு சில மலைச்சிகரங்களாகும். நில்வள கங்கை, ஜின் கங்கை, பெந்தோட்டைகங்கை என்பன இம்மலைத் தொடர்களில் ஊற்றெடுக்கும் ஆறுகளாகும். இலங்கையின் மிகப்பழைய காடெனப் பாதுகாக்கப்பட்டுவரும் சிங்கராஜவனமும் இவ்வலயத்திலேயே உள்ளது.



தேசப்படம் 4.5 சப்ரகமுவ மலைத்தொடர்

கல்லோயாக் குன்றுகள்

மத்திய மலைநாட்டுக்குக் கிழக்கே அமைந்துள்ள குன்றுகள் இவ்வலயத்தக்குரியன. இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறித் தனிக்குன்றுகளாகக் காணப்படுகின்றமை இவ்வலயத்திற்கு இயல்பான சிறப்பம் சமாகும். கோவிந்தகலை மலைத்தொடர் (வெஸ்ற் மின்ஸ்ரன் அபே) கொக்காகலை, நுவரகலை, இங்கினியாகலை, மொனராகலை என்பன உதாரணங்களாகும்.

இக்குன்றுப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் ஆறுகளுள் கும்புக்கன் ஓயா, வில் ஓயா, ஹெட ஓயா, கல் ஓயா



படம் 4.6
கல்லோயக் குன்றுத் தொகுதி

செயற்பாடு 3

- இலங்கையின் பௌதிக அம்சங்கள், பொருளாதாரத்தை உருவாகுவதற்கு வழிவகுக்கும் என்ற தலைப்பில் கையேடு ஒன்றைத் தயாரிக்குக.
- சுற்றுலாப் பயணிகள் பயன் பெறும் விதத்தில் இலங்கையின் புவியியல் சூழலில் அமைந்துள்ள இயற்கை அழகுமிக்க இடங்கள் பற்றிய சிறு கையேடு ஒன்று தயாரிக்க.
- மத்திய மலைநாட்டின் மாதிரி ஒன்றைத் தயாரிக்குக.
- மத்திய மலைநாட்டின் தரைத்தோற்ற அம்சங்களை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

மத்திய மலைநாட்டின் தரைத்தோற்ற அம்சங்கள்	உதாரணம்	பயன்பாடு

இலங்கையின் காலநிலை வலயங்கள்

ஒத்த காலநிலைத்தன்மைகள் நிகழும் பிரதேசங்கள் காலநிலை வலயம் என அழைக்கப்படும். காலநிலையை நிர்ணயிக்க உதவும் வெப்பநிலை, காற்று, மழைவீழ்ச்சி என்னும் காலநிலைக் கூறுகள் ஒன்றோடொன்று நிகழ்ந்ததும் இடைத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையை நான்கு காலநிலை வலயங்களாக வகுக்கலாம். (4.7 படத்தைப் பார்க்கவும்)

1. தாழ்நில ஈரவலயம்
2. தாழ்நில உலர்வலயம்
3. மலைநாட்டு ஈரவலயம்
4. மலைநாட்டு உலர்வலயம்

(அரை குறை வறள்வலயம் என்று வரையறுத்துக் கூறப்படும் வடமேற்கு, தென்கிழக்குப் பிரதேசமும்

அரைகுறை வறள் வலயம்

- வருடாந்த மழைவீழ்ச்சி 650மி.மீ - 1250 மி மீற்றருக்கு இடைப்பட்டதாகும்
- ஆண்டொன்றில் 30 - 60 நாள்வரை வரட்சி நிலவுகிறது.
- ஒக்டோபர் தொடக்கம் ஜனவரி வரை மேற்காவுகை மூலமும் சூறாவளி மூலமும் மழை கிடைக்கின்றது.
- கிடைக்கின்ற மழைவீழ்ச்சி குறைவு.
- ஆவியாதல் அதிகம்.

தாழ்நில உலர் வலயம்

- மழைவீழ்ச்சி 1250மி.மீற்றர் - 2000 மி மீற்றருக்கு இடைப்பட்டதாகும்.
- டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரை வடகீழ் பருவக்காற்று மூலம் மழை கிடைக்கும்.
- மழைகாலமும் வரண்ட காலமும் நிலவும்.
- நிரந்தரமற்ற மழைவீழ்ச்சியும், ஆவியாதல் அதிகமாக இருத்தலும் இவ்லயத்தின் சிறப்பான அம்சமாகும்.
- ஓர் ஆண்டில் 30 - 60 நாட்கள் வரை வரட்சி நிலவும்.

மலைநாட்டு ஈரவலயம்

- மாத்தளை, கண்டி, நுவரெலியா, அப்புத்தளை ஆகிய நகரங்களை இணைத்து ஒரு கோடு வரைந்தால் அதற்கு மேற்கே உள்ள பிரதேசம் மலைநாட்டு ஈரவலயமாகும்.
- ஆண்டு முழுவதும் மழையைப் பெறுகின்றது. சராசரி மழை வீழ்ச்சி 3000mm ஆகும். ஆகக் கூடுதலான மழை வீழ்ச்சியை வட்டவளைப் பிரதேசம் பெறுகின்றது.
- டிசம்பர் தொடக்கம் பெப்பரவரி வரை வரண்ட காற்று வீசும்.



மலைநாட்டு உலர் வலயம்

- மலைநாட்டு ஈரவலயத்தின் கிழக்குப்பகுதி இவ்வலயத்திற்குரியது.
- சராசரி மழைவீழ்ச்சி 1750mm தொடக்கம் 2000mm இடைப்பட்டதாகும்.
- மலைநாடாக இருந்த போதும் மழைவீழ்ச்சி குறைவாக உள்ளது. காரணம் காற்றொதுக்குப் பக்கத்தில் அமைந்திருப்பதாகும்.

தாழ்நில ஈரவலயம்

- ஆண்டு சராசரி மழைவீழ்ச்சி 2000 mm க்கு அதிகமாகவும் கடல் மட்டத்திலிருந்து 300 m க்கு குறைவான உயரமும் கொண்ட தென்மேல் பிரதேசம் இல்வலயத்தினுள் அடங்கும்.
- சராசரி வெப்பநிலை 27°C வரையாகும்
- மே - செம்டம்பர் வரை தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றால் மழைவீழ்ச்சியைப் பெறும்.
- மார்ச் - ஏப்ரல், ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் மேற்காவுகை மூலம் மழையைப் பெறுகின்றது.
- ஆண்டு முழுவதும் மழைவீழ்ச்சியைப் பெறுவதால், இங்கு உலர்பருவம் என்பது இல்லை.
- பெப்ரவரி, ஆகஸ்ட் மாதங்கள் அதி வறட்சியான மாதங்களாகும்.

தேசப்படம் 4.7
இலங்கையின் காலநிலை வலயங்கள்

செயற்பாடு 4

1. தாழ்நில ஈரவலயம், தாழ்நில உலர்வலயம் ஆகிய இரு காலநிலை வலயங்களினதும் வேறுபாடுகளை ஒப்பிடுக.
2. நீங்கள் வசிக்கும் பிரதேசம் அமைந்துள்ள தரைத்தோற்ற வலயத்தினதும் காலநிலை வலயத்தினதும் பெயரைக் குறிப்பிட்டு அங்கு காணப்படும் தரைத்தோற்ற அம்சங்களும் காலநிலையின் அம்சங்களும் மனித நடவடிக்கைகளுக்கு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை விளக்குக.

இலங்கையின் இயற்கைத் தாவரம்

மனிதனின் தலையீடுகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, அன்றி இயற்கையாக ஒரு பிரதேசத்தில் வளர்ந்துள்ள தாவர மூடுகை இயற்கைத் தாவரம் என அழைக்கப்படுகின்றது. மண், வெப்ப நிலை, சூரியஒளி மற்றும் மழைவீழ்ச்சி ஆகிய சாதகமான காரணிகள் இயற்கைத்தாவர வளர்ச்சியில் பிரதானமாக செல்வாக்கு செலுத்துகின்றன. 4.8 தேசப்படத்தில் இலங்கையின் இயற்கைத் தாவர வலயங்களையும் மழைவீழ்ச்சிப் பரம்பலையும் பார்க்கலாம். இயற்கைத் தாவரப் பரம்பலில் மழைவீழ்ச்சி எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை மழைவீழ்ச்சிக் கோடுகளைக் காட்டும் தேசப்படத்துடன் ஒப்பிட்டு பார்த்தல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மத்திய கோட்டு ஈரவலயக் காடுகள்

- 2000mm க்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி தாழ்நிலப் பிரதேசங்களிலும், மத்திய மலைநாட்டிலும் பரந்து காணப்படுகின்றது. அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக (விவசாயம்,நகரமயமாக்கல்) காடுகள் அழிக்கப் பட்டுள்ளமையால் இன்று ஆரம்ப இயற்கை காடுகளில் எஞ்சியிருப்பது, சர்வதேச மரபுரிமைச் சொத்தாகிய சிங்கராஜ காட்டுப்பிரதேசம் மட்டுமேயாகும்.
- தாவரப் பல்வகைமை உண்டு. உ-ம் ஹொர, ஈரப்பலா, கொடபர, நாக மரம் போன்றன இங்கு காணப்படுகின்றன. உயிர் பல்வகைமை காணப்படுவது விசேட இலட்சணமாகும்.
- பல்வேறு பட்ட உயரங்களைக் கொண்ட தாவரங்களினால் உருவாக்கப்பட்ட படை அடுக்குகள் பல உள்ளன.
- இவ்வுயரமான மரங்களினடியில் கீழ்வளரிகள் காணப்படுகின்றன.

உலர் கலப்பு என்றும் பசுமையான காடுகள்

(உலர்வலயக் காடுகள்)

- உலர் வலயம் முழுவதும் பரந்து காணப்படுகின்றது.
- சிலமரங்களின் இலைகள் சிலபருவங்களில் உதிர்ந்து விடுவதால் உலர்கலப்புக்காடுகள் என்றும் பசுமையான காடுகள் என்றும் பெயர் பெற்றுள்ளது.
- சராசரி மழைவீழ்ச்சி 1250mm - 2000mm ஆகும். மே - ஆகஸ்ட் வரை கோடை காலமாகும். வருடத்தின் ஒரு பருவத்தில் மாத்திரம் பருவ மழை வீழ்ச்சியைப் பெற்றுக் கொள்வதாலும், அதிகரித்த ஆவியுயிர்ப்பு, ஆவியாக்கம் ஆகிய காரணங்களாலும் காடுகள் அடர்த்தியாக வளர்வதில்லை.
- முதிரை, கருங்காலி, வேம்பு, பாலை, போன்ற பெறுமதியான மரங்களை இங்கு காணலாம்.
- யானை, எருமை, மான் காட்டுப்பன்றி ஆகிய மிருகங்களும் காணப்படுகின்றன.



படம் 4.8
இலங்கையின் இயற்கைத் தாவர வலயங்களும் மழைவீழ்ச்சி பரம்பலும்

இடை வெப்பவலய என்றும் பசுமையான காடுகள்

- ஈரவலயத்தையும் உலர்வலயத்தையும் பிரிக்கும் எல்லையின் இருபுறங்களிலும் அமைந்துள்ள பிரதேசமாகும். மொனராகலை, குருநாகல், தங்காலை ஆகிய பிரதேசங்களில் இக்காடுகளைக் காணலாம்.
- அதனால் ஈரவலயத் தாவரங்களும், உலர்வலயத் தாவரங்களும் இணைந்து காணப்படுகின்றன. மகோகனி, மலை வேம்பு ஆகிய மரங்கள் இதற்கு உதாரணமாகும்.

மலைநாட்டு ஈரவலயக் காடுகள்

- 1200 மீற்றர் உயரமான பிரதேசங்களில் அமைந்துள்ளன. சராசரி வருட மழைவீழ்ச்சி 2000mm க்கு அதிகமாகும். வெப்பநிலை 22^0c - 24^0c வரையிலாகும்.
- ஹோட்டன் சமவெளி, பீதுறுதாலகாலை, நக்கிள்ஸ், சிவனொளிபாத மலை ஆகிய பிரதேசங்களில் காணப்படுகின்றது.
- தேயிலை, உருளைக்கிழங்கு ஆகியவற்றின் பயிரிச்செய்கைக்காக காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால் காடுகள் படிப்படியாகக் குறைவடைந்து செல்கின்றது.
- மரங்களின் உயரம் 8 - 10 மீற்றர் அளவின கீன, ஜம்பு (வல்சப்பு) ஆகிய மரங்கள் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களில் தாவர ஒட்டுண்ணிகளான ஒக்கிட்டுக்கள், பாசிகள், லைக்கன் ஆகியனவற்றையும் காணலாம்.

புன்னிலங்கள்

- புன்னிலங்களின் அமைவிடம், உயரம் என்பனவற்றின் அடிப்படையில் அவை உலர் பத்தனைப் புன்னிலம், ஈரப்பத்தனை புன்னிலம் என பாகுப்படுத்தப்படுகின்றது.

(i) உலர் பத்தனை - நக்கிள்ஸ் மலைத்தொடரின் மேற்குப் பக்கச்சாய்விலும் ஊவா வடிநிலத்திலும் பரவிக் காணப்படுகின்றது.
1250 - 1900 மி.மீற்றர் வரையான மழைவீழ்ச்சி மானா புற்கள் பெருமளவில் காணப்படுகின்றது.

(ii) ஈரப்பத்தனை - 1400 மீற்றரிலும் உயரமான மலை பிரதேசங்களில் காணப்படுகின்றன. ஹோட்டன் சமவெளி, மூன்சமவெளி, சீதாஎலிய, அம்பேவல, கந்தபொல ஆகிய பிரதேசங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

- பிபிலை, லுணுகல, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் "இலுக்" புல்வகைகள் காணப்படுகின்றன. இங்கு கடுக்காய் புல், நெல்லி, கம்மாலு போன்ற மரங்கள் (தீயைத்தாங்கக் கூடியவை) இடத்துக்கிடம் காணப்படுகின்றன. இதனை 'சவன்னா' புல் நிலம் என அழைப்பர்.
- மெல்லிய மட்படை, வருடத்தில் பெரும்பாலும் வேகமாக வீசும் காற்று, குறைந்த மழைவீழ்ச்சி என்பன புல்வெளிகளின் வளர்ச்சிக்கு உதவும் ஏதுக்களாகும்.

பற்றைக்காடுகளும், முட்புதர்களும்

- இலங்கையில் வடமேற்கு தென்கிழக்குப் பிரதேசங்களில் காணப்படுகின்றன.
- 1000மி.மீ - 1250மி.மீ வரையான மழைவீழ்ச்சியையும் 27^0c வெப்பநிலையையும் கொண்டுள்ளன.
- வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று மூலம் மழை கிடைக்கின்றது.
- ஆறுமாத கால நீண்ட வரட்சியைத் தாக்கக்கூடியதான தாவரங்கள் காணப்படுகின்றன. இலைகள் குறைவு, முள் வடிவு கொண்ட கள்ளி, நாகதாளி, விடத்தல் அடம்பன் முதலிய முதலிய தாவரங்கள் காணப்படுகின்றன.
- தடித்த பட்டைகளைக் கொண்ட பாலை, வீரை முதலிய மரங்களும் காணப்படுகின்றன.

கண்டல் தாவரங்கள்

- யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, நீர்கொழும்பு, புத்தளம். மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் கரையோரப்பிரதேசங்களில் பரவியுள்ளன.
- கடற்கரைக்கரைச் சூழலுக்கு இசைவான தாவரம்.
- வேர்கள் நீரின் மேல் பரந்திருக்கும் இவ்வேர்கள் கயர்வேர், கருவேர், மூச்சுவேர் என மூன்று வகைப்படும்.
- (கண்டல், கிரல, கிங்பொல், கரன் கொக்கு, கட்டுஇகிலி) கண்டல் தாவரங்களில் சிலவாகும்.
- இராவணன் மீசை முதலான முள் உள்ள தாவரங்கள் இவற்றுள் சிலவாகும்.

இலங்கையில் தாவரவளம் அழிவுறுவதற்கான காரணங்கள்

- ❖ பூச்சியினங்களின் தொல்லை (வண்டுகள், மயிர்க்கொட்டி, கொறவனவன்புழு, கறையான்)
- ❖ சூறாவளி, புயற் காற்று
- ❖ கட்டுப்பாடின்றி மரங்களை வெட்டுதல்
  - வீடுகள் கட்டுதல்.
  - அபிவிருத்தி திட்டங்கள்.
  - போக்குவரத்து, மின்சாரம் போன்ற நடவடிக்கைகள்.
  - சட்டவிரோதமாக மரங்களை வெட்டுதல்.
- ❖ தீவைத்தல்
  - சேனைப் பயிர்ச் செய்கைக்கு நிலங்களை தயார் படுத்துதலை மேற்கொள்ளல்.
  - மிருகங்களை வேட்டையாடுதல், தேன் சேகரித்தல்.

காட்டு வளங்களை பாதுகாப்பதற்கான உத்திகள்

- ❖ பதிலீட்டுப் பொருட்களைப் பயன்படுத்தல்
- ❖ மாற்று எரிபொருள் வளங்களை கண்டறிதல்.
- ❖ மக்களுக்கு அறிவூட்டுதல்.
- ❖ சட்டங்களை உரிய விதத்தில் நடைமுறைப்படுத்தல்.
- ❖ மரப்பலகைகளை பயன்படுத்தும் போது ஏற்படும் வீண்விரயத்தை தடுத்தல்.
- ❖ மீள் காடாக்கல்.
- ❖ மரத்திலிருந்து உச்ச பயன்களை பெறல்.

செயற்பாடு : 5

- ❑ காட்டு வளங்களைப் பாதுகாப்பதனால் ஏற்படும் பயன்கள் பற்றிய கையேடு ஒன்றினைத் தயாரிக்க.
- ❑ தாவரங்களின் வளர்ச்சியில் காலநிலையின் செல்வாக்கு பற்றி விளக்குக.